29th June 1957] [Sri C. Subramaniam]

கோயம்புத்தூர், வேலூர், ஆகிய இவ்விடங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளில் 14·9 லட்ச ரூபாய் செலவில் அபிவிருத்தி வேலைகள் இந்த ஆண்டில் செய்யப்படும். மருத்துவக் கல்விக்குப் பயன்படும் ஆஸ்பத்திரிகளின் தேவைகளைக் கவனித்து, மதுரை மருத்துவக் கல்லூரிக்காக 29·8 லட்ச ரூபாய்; சென்னை மருத்துவக் கல்லூரிக்காக 11·5 லட்ச ரூபாய்; ஸ்டான்லி மருத்துவக் கல்லூரிக்காக 3·4 லட்ச ரூபாய்; மான்யமாக இவ்வகையில் வேண்டப்படுகிறது. தற்போது நடந்துவரும் பயிற்சி அளவிற்கு மேலாக 200 தாதிகள், 200 மருந்து வழங்குபவர் (Pharmacist), 200 தொழில் நுட்ப உதவியாளர், 200 பிரசவ உதவியாளர்கள், 30 கண் வைத்தியர்கள், இவர்களுக்கு பயிற்சி அளிக்கவும் வசதி செய்யப்படும்.

பொதுச் சுகாதாரம்.

22. குடி தண்ணீர் வழங்கும் வகையில் நமக்கு வேண்டிய குழாய்களைப் பெறுவதில் தடைகள் சில இருந்த போதிலும், 15 நகராட்சிப் பகுதிகளுக்குப் பயன்படும் நகரக் குடி தண்ணீர் திட்டங்கள் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளன. இதற்காக இந்த ஆண்டில் 93 லட்ச ரூபாய் செலவிட உத்தேசம். நாற்பது லட்ச ரூபாய் செலவில், முக்கியமாக கிணறு வெட்டுவதன் மூலமாக கிராமத் தண்ணீர் விநியோகத் திட்ட வேலையும், டெல்டாப் பகுதிகளுக்கு 20·5 லட்ச ரூபாய் செலவில் வகுத்த, பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் திட்ட வேலையும் தொடர்ந்து நடந்து வருகின்றன. மற்ற ஆரோக்கியவசதித் திட்டங்களில், தாய்சேய் நலத்திற்காக 4·7 லட்ச ரூபாய் செலவில் திறக்கப்படும் 96 புதிய பிரசவ, சேய் நல விடுதிகளும் 4·1 லட்ச ரூபாய் செலவில், திறக்கப்படும் 79 புதிய "குடும்பக் கட்டுப்பாடு" நிலையங்களும் அடங்கியுள்ளன.

கல்வி.

23. சட்டசபைக் குழு ஒன்று கல்விக் கொள்கைகளைப் பற்றி செய்திருக்கும் முடிவுகளை அரசாங்கம் பரிசீலனை செய்துவருகிறது. இதற்கிடையில் புதிய வகுப்புகளைத் துவக்குவதற்காக 20 லட்ச ரூபாயும் தொடக்கப் பள்ளிகளை ஆதாரக் கல்விப் பள்ளிகளாக மாற்ற 10 லட்ச ரூபாயும், 23 சாதாரணப் பயிற்சிப் பள்ளிகளை ஆதாரக் கல்விப் பயிற்சிப் பள்ளிகளாக மாற்ற 23 லட்ச ரூபாயும் ஒதுக்கி வைக்கப் பட்டுள்ளது. சென்ற ஆண்டில் ஒரு லட்சத்திற்கு மேல் புதிய மாணவர்களைச் சேர்த்துள்ளோம். இதே அளவில் இந்த ஆண்டும் பெருக்கம் ஏற்படும். ஆரம்பப் பள்ளிகளில் ஏழை மாணவர்களுக்குப் பகல் உணவு அளிப்பதற்காக 10 லட்ச ரூபாய் மான்யம் கேட்கப்படுவதையும் இந்த சமயத்தில் குறிப்பாக எடுத்துக் காட்ட வேண்டும். அரசியல் சட்டத்தின் 45-வது பிரிவின் குறிக்கோளை, ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் நிறைவேற்றுவதற்கு இந்தச் சலுகை மிக அவசியமாக இருக்கும் என்று சட்டசபைக் கல்விக் குழுவினர் யோசனை கூறியுள்ளார்கள். இந்த ஆண்டு இது துவக்கப்பட இருக்கின்றது. பதிவு செய்யப்படாத அரசாங்க ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட ஊதிய உயர்வு பொதுவாகப் பள்ளி ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டும் இந்த வகையில் 132 லட்ச ரூபாய் செலவிடப்படுகிறது.

தொழிற் கல்வி.

24. தொழில் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற வேண்டுமானால்